### பிரேசிலில் இருந்து

# மேலும் 2 மெட்ரோ ரயில்கள் சென்னை வந்தன

**பணிமனையில் சோதனை ஓட்ட பணிகள் தீவிரம்**



சென்னை, ஜன. 27: பிரேசில் நாட்டிலிருந்து மேலும் 2 மெட்ரோ ரயில்கள், நேற்று மாலை கப்பல் மூலம் சென்னை வந்தது. இந்த ரயில்கள் இன்று கோயம்பேடு பணிமனைக்கு எடுத்து செல்லப்படுகிறது.

சென்னை வண்ணாரபேட்டையிலிருந்து, விமான நிலையம் வரையிலும், சென்ட்ரலிலிருந்து, புனித தோமையர் மலை வரையிலும், 2 வழித்தடங்களில் 45 கிலோ மீட்டர் தூரத்திற்கு, மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதற்காக, சுரங்கம் மற்றும் மேம்பாலம் அமைக்கும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் கோயம்பேட்டிலிருந்து, புனித தோமையர் மலை வரை முதற்கட்டமாக, 11 கிலோ மீட்டர் தூரத்திற்கு மெட்ரோ ரயிலை இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அனைத்து மெட்ரோ ரயில்களும் ஏசி மற்றும் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டு வருகிறது. இதில், 9 ரயில்கள் பிரேசில் நாட்டிலிருந்தும், மீதமுள்ள 33 ரயில்கள் ஆந்திரா மாநிலம் தடாவில் உள்ள, பிரேசில் நாட்டு தொழிற்சாலையிலும் வடிவமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஜூன் மாதம், பிரேசில் நாட்டிலிருந்து, முதல் மெட்ரோ ரயில் சென்னைக்கு கொண்டு வரப்பட்டு, கோயம்பேடு பணிமனையில் சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. அதை தொடர்ந்து, கடந்த 2 மாதங்களுக்கு முன், மேலும் 2 மெட்ரோ ரயில்கள், பிரேசில் நாட்டிலிருந்து சென்னை வந்தது. இந்த 3 மெட்ரோ ரயில்களும் தற்போது கோயம்பேடு பணிமனையில் நிறுத்தப்பட்டு சோதனை ஓட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

இதில் அனைத்து தொழில் நுட்பங்களும், சரியாக இயங்குவதாக மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர். இந்நிலையில், பிரேசில் நாட்டிலிருந்து மேலும், 2 மெட்ரோ ரயில்கள் கடந்த மாதம் கப்பல் மூலம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த 2 மெட்ரோ ரயில்களும், கடந்த ஒரு மாத பிரயாணத்திற்கு பிறகு, நேற்று மாலை சென்னை துறைமுகம் வந்தடைந்தது. துறைமுகத்தில் வழக்கமான சுங்க சோதனைகள் அனைத்தும் முடிவடைந்து, இன்று கப்பலில் இருந்து ராட்சத கிரைன் மூலம் துறைமுக தளத்தில் இந்த மெட்ரோ ரயில்கள் இறக்கி வைக்கப்படுகிறது.

பின்னர், சுங்க அதிகாரிகள் மற்றும் போக்குவரத்து போலீஸ் அதிகாரிகளின் அனுமதி கிடைத்ததும், இன்று இரவு அல்லது நாளை, லாரிகள் மூலம் சென்னை துறைமுகத்திலிருந்து கோயம்பேடு பணிமனைக்கு எடுத்து செல்லப்படும். கோயம்பேட்டில் உள்ள பணிமனையில் இந்த ரயில்களின் பாகங்கள் சரியாக இருக்கிறதா என, அடுத்தடுத்த நாட்களில் பரிசோதிக்கப்பட்டு, அடுத்த சோதனை ஓட்டம் நடத்தி பார்க்கப்படும்.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் உயர் அதிகாரிகள் கூறும்போது,

பிரேசில் நாட்டிலிருந்து இதுவரை 5 மெட்ரோ ரயில்கள் சென்னை வந்துள்ளது. மேலும், 4 மெட்ரோ ரயில்கள் பிரேசில் நாட்டில் தயாரிக்கப்பட்டு வருகிறது. அந்த ரயில்களும் இன்னும் ஒரு சில வாரங்களில் தயாராகி விடும். இதைதொடர்ந்து, அந்த ரயில்கள் அடுத்த மாதம் சென்னைக்கு கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலும், ஆந்திரா மாநிலம் தடாவில் தயாரிக்கப்பட்டு வரும், 3 மெட்ரோ ரயில்களும் தயாராக உள்ளது. இந்த ரயில்களும் விரைவில் சென்னைக்கு எடுத்து வரப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**எக்ஸ்ட்ரா தகவல்**

சென்னை மெட்ரோ ரயிலுக்காக, 42 மெட்ரோ ரயில்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மெட்ரோ ரயிலும், 4 பெட்டிகள் கொண்டதாக இருக்கும்.